### நாட்டு மக்களின் வீடுகளில் அடுப்பு எரிய வேண்டுமா? அல்லது அவர்களது வயிறு எரிய வேண்டுமா?

# ஒன்றிய பி.ஜே.பி. அரசே! காஸ் சிலிண்டர் விலை உயர்வை உடனே திரும்பப் பெறுக!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – சமூக வலைதளப் பதிவு!



**சென்னை, ஏப்.9- ஒன்றிய பா.ஜ.க. அரசு காஸ் சிலிண்டர் விலையை நேற்று முன்தினம் மாலை திடீரென உயர்த்தியுள்ளது. அதனைக் கண்டித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "ஒன்றிய பி.ஜே.பி. அரசே! தேர்தல் வரும் வரை காத்திராமல், காஸ் சிலிண்டர் விலை உயர்வை உடனே திரும்பப் பெறுக!" என வலியுறுத்தியுள்ளார்.**

கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

"நாட்டு மக்களின் வீடுகளில் அடுப்பு எரிய வேண்டுமா? அல்லது அவர்களது வயிறு எரிய வேண்டுமா?

"உதவி செய்யாவிட்டாலும் உபத்திரவம் செய்யாமல் இருந்தாலே போதும்" என்பது, 'சாடிஸ்ட்' பி.ஜே.பி. அரசுக்கு மிகவும் பொருந்தும்!

உலக அளவில் சக்சா எண்ணெயின் விலை சரிந்துள்ள நிலையில், பெட்ரோல் - டீசல் விலையைக் குறைக்காவிட்டாலும் பரவாயில்லை, விலையை ஏற்றாதீர்கள் எனக் கெஞ்சும் பரிதாப நிலைக்கு நாட்டு மக்களைத் தள்ளிவிட்டார்களே!?


வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவது போல், சமையல் காஸ் சிலிண்டர் விலை உயர்வு அமைந்திருக்கிறது.

மக்களே...

அடாவடியாக விலையை உயர்த்திவிட்டு, தேர்தல் நெருங்கும் நேரத்தில் அதில் சிறு பகுதியைக் குறைத்து நாடகம் ஆடுவது பா.ஜ.க.வின் வழக்கமாகிவிட்டது! இந்த நாடகத்தைப் பார்த்துப் பார்த்து நமக்கும் பழக்கமாகிவிட்டது!

ஒன்றிய பி.ஜே.பி. அரசே...

தேர்தல் ஏதாவது வரும் வரை காத்திராமல், இந்த விலை உயர்வை உடனே திரும்பப் பெறுக!"




இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## வலைதளங்களில் வைரலாக வலம் வரும் செய்தி!




### தமிழ்நாட்டுக்காக – சிறுபான்மை மக்களுக்காக முதல்வர் கேள்வி எழுப்பும் போதெல்லாம்

# ஊழல் குற்றச்சாட்டு சுமத்த - சட்டத்தை மீறி சோதனைகள் நடத்துகிறார்கள்!

## 'மக்கள் இதனை நிராகரிப்பார்கள்' என கழக சட்டத்துறைச் செயலாளர் – மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. கடும் கண்டனம்!

**சென்னை, ஏப்.9- அரசியலமைப்பின் படி தமிழ்நாடு முதல்வர் கேள்வி எழுப்பும் போதெல்லாம் அதனை எதிர்கொள்ள முடியாமல் காலங்கடந்து, சட்டத்தை மீறி சோதனைகள் நடைபெறுகின்றன எனவும், எப்பொழுதெல்லாம் தமிழ்நாட்டிற்காக குரல் கொடுக்கின்றோமோ, அப்பொழுதெல்லாம் ஊழல் குற்றச்சாட்டு சுமத்த முயற்சிக்கிறார்கள். மக்கள் நிச்சயம் இதனை நிராகரிப்பார்கள் என்றும் கழக சட்டத்துறை செயலாளர், மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. செய்தியாளர் சந்திப்பின்போது கடும் கண்டனத்தை தெரிவித்தார்.**

மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

இன்றைய தினம் அமலாக்கத் துறையினுடைய அதிகாரி சோதனையின் போது அளித்த விவரங்களின்படி 2013-ஆம் ஆண்டு வங்கிகளில் பெறப்பட்ட கடன் தொகை சம்பந்தமாக சி.பி.ஐ. 2021-இல் ஒரு வழக்கு பதிந்து அதன் பிறகு ஒரு குற்றப்பத்திரிக்கையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



ஏறக்குறைய நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு பிறகு குற்றம் நடந்ததாக சொல்லப்படும் நாளில் இருந்து ஏறக்குறைய 12 ஆண்டுகளுக்குப் பிறகு அமலாக்கத்துறை இந்த சோதனை நடவடிக்கையை எடுத்திருக்கிறது.

அரசு அலுவலகங்களிலும், அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள அமைச்சர்கள் மீதும் தொடங்கப்படும் இந்த நடவடிக்கைகள் எல்லாம் எப்போது எடுக்கப் படுகிறது என்பதை தமிழக மக்கள் அறிவார்கள்.

பாராளுமன்றத்தில் உருவாக்கப்பட்ட நீட் தேர்வு சட்டத்தை எதிர்த்து தமிழக சட்டமன்றத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போதும், தொகுதி மறுசீரமைப்பு குறித்து தமிழகத்தில் தமிழக முதல்வரின் ஒருங்கிணைப்பில் தென் மாநிலங்களைச் சேர்ந்த அனைத்து தலைவர்களும் சேர்ந்து ஒன்றிய அரசுக்கு எதிராக தென் மாநிலங்கள் வஞ்சிக்கப்படக்கூடாது என ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிய பொழுதும், தமிழக சட்டப்பேரவை இதுகுறித்து தீர்மானம் நிறைவேற்றிய போதும், இருமொழிக் கொள்கை தான் எங்களுடைய கொள்கை மும்மொழிப் கொள்கையை நாங்கள் ஏற்கமாட்டோம் என்று தமிழகம் சொன்ன போதும் தமிழக முதல்வர் அதை வலியுறுத்தி சொன்ன போதும், பிறகு வக்ஃபு சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்ற ஒன்றிய அரசு முயன்றபோது தமிழக மக்களின் உணர்வாக அதற்கு எதிராக தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானம் இயற்றப்பட்ட போதும் அதற்கு சரியான பதில் இல்லாமல், அரசியலமைப்பின் படி திராவிட முன்னேற்றக் கழகமும் தமிழக முதல்வரும் எழுப்பிய நியாயமான கோரிக்கைகளை எதிர்கொள்ள இயலாமல் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் மீதும் அதன் அமைச்சர் பெருமக்கள் மீதும் காலம் கடந்த சட்டத்தை மீறிய சோதனைகள் நடைபெற்று வருகின்றன. இதனை தமிழக மக்கள் நன்றாக அறிவார்கள்.

ஊடகங்களில் அமைச்சர் பெயரையும் அவருடைய மகன், குடும்பத்தினுடைய பெயரையும் சொல்லி ஏதோ ஒரு ஊழல் குற்றம் போல சித்தரிக்க முயல்கிறார்கள்.

அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனையின் போது குறைந்தபட்சமாக தெரிவித்த தகவல்களின்படி அந்த வழக்கு 2013-இல் நடைபெற்ற நிகழ்வுக்காக 2021-ஆம் ஆண்டு சி.பி.ஐ. யினால் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட ஒரு வங்கி பரிவர்த்தனை சம்பந்தப்பட்டது மட்டுமேயன்றி, எந்த ஒரு ஊழல் வழக்கையும் சார்ந்தது அல்ல!

எப்பொழுதெல்லாம் தமிழகத்திற்காக குரல் கொடுக்கின்றோமோ, எப்பொழுதெல்லாம் தமிழக மக்களுக்காக குரல் கொடுக்கிறாமோ, எப்பொழுதெல்லாம் சிறுபான்மையினருக்காககுரல்கொடுக்கிறோமோ அப்பொழுதெல்லாம் ஊழல் குற்றச்சாட்டு சுமத்த முயற்சிக்கிறார்கள்.

மக்கள் நிச்சயம் இதனை நிராகரிப்பார்கள்.

இவ்வாறு மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ எம்.பி. தெரிவித்துள்ளார்.

# கன்னியாகுமரி மாவட்டத்தில் ஐ.டி.பார்க் அமைத்திடுக!

## சட்டப் பேரவையில் மனோ தங்கராஜ் கோரிக்கை!

சென்னை, ஏப். 9- சட்டப் பேரவையில் உறுப்பினர் மனோதங்கராஜ் கேட்ட கேள்வியும், அக்கேள்விக்கு அமைச்சர் டிபி.ஆர்.பி.ராஜா அளித்த பதிலும் வருமாறு:-



**த.மனோ தங்கராஜ்:** கன்னியாகுமரி மாவட்டம் கல்வியில் சிறந்த மாவட்டம். அங்கு நிறைய பொறியியல் கல்லூரிகள் இருக்கின்றன. பட்டம் படித்த மாணவர்கள் நிறைய இருக்கிறார்கள். ஆனால், எங்களுடைய மாவட்டத்தில் பெரிய தொழிற்சாலைகள் கொண்டு வருவதற்கான இடம் இல்லாத சூழ்நிலை இருப்பது எல்லோருக்கும் தெரியும். எனவே, அதை கருத்தில்கொண்டு அங்கு ஒரு IT Park, அதாவது நீண்டகாலமாக இந்த கோரிக்கையை நம்முடைய மக்கள் வைத்திருக்கின்றார்கள். நம்முடைய தேர்தல் வாக்குறுதியிலும் இது இருக்கிறது. இரண்டு இலட்சம் சதுர அடிக்கு குறையாமல் ஒரு IT Park கண்டிப்பாக இந்த முறை தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதோடு அங்கிருக்கக்கூடிய வாய்ப்பே IT, இன்னொன்று Tourism. Tourismக்கும் சில கட்டமைப்புகளை உருவாக்கினால் அதை இன்னும் பெரியதாக உருவாக்க முடியும். எனவே, IT park அமைப்பதற்கும், Tourism கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கும் நம்முடைய முதல்வர் அவர்கள் முன்வர வேண்டுமென்று வாயிலாக நான் கேட்டுக்கொள்கின்றேன்.

**முனைவர் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா:** திராவிட நாயகன் அவர்களுடைய ஆட்சியில்தான் பரவலாக்கப்பட்ட வளர்ச்சியினை உறுதி செய்யும் அளவிற்கு, பல்வேறு பகுதிகளில் ஏறத்தாழ 10 இடங்களில் Neo TIDEL Parks அமைக்கப்பட்டு, நான்கு இடங்களில் அவை திறக்கப்பட்டு, அனைத்தும் fulla ஆக நிரம்பி வருகின்றன. மீதமுள்ள ஆறு இடங்களிலும் இப்போது பணி நிறைவடையும் தருணத்தில் உள்ளன. உறுப்பினர் அவர்கள் கேட்கும், கன்னியாகுமரி பகுதியில் நிச்சயமாக ஒரு தொழிற்பூங்காIT Park, Mini TIDEL Park அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை அமைச்சர் அவர்களும், நிதித் துறை அமைச்சர் அவர்களும், பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்களும், கன்னியாகுமரி பகுதியைச் சார்ந்த பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்களும் அதைக் கோரி வருகின்றார்கள். நிச்சயமாக அங்கே அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. ஒரு நல்ல இடம் கிடைத்தவுடன் அமைப்பதற்கான வேலையை நிச்சயமாக திராவிட நாயகன் அவர்களின் இந்த ஆட்சியில் செய்யப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றன.



கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி ஆகியோர் தமிழ்நாடுஅரசின் 2025 – 2026 ஆம் ஆண்டிற்கான கூட்டுறவுத் துறை, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை ஆகிய துறைகளின் சார்பில் தமிழ்நாடு அரசின் மானியக் கோரிக்கை நடை பெறவுள்ளதையொட்டி நேற்று (8.4.2025) சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா – முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் நினைவிடங்களில் மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள். இந்நிகழ்வில் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன் உள்ளார்.




## தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை, மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

சென்னை வடக்கு, தருமபுரி கிழக்கு, தருமபுரி மேற்கு, நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, ஈரோடு வடக்கு மற்றும் சேலம் கிழக்கு ஆகிய மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 09.04.2025 புதன்கிழமை | காலை 9.00 மணி | நாமக்கல் கிழக்கு | நளா ஹோட்டல், திருச்சி சாலை, நாமக்கல். |
| 09.04.2025 புதன்கிழமை | மாலை 4.00 மணி | சென்னை வடக்கு | அறிவகம் திருமண மாளிகை, இராயபுரம். |
| 10.04.2025 வியாழக்கிழமை | காலை 9.00 மணி | நாமக்கல் மேற்கு | கொங்கு சமுதாயக்கூடம், அண்ணா சிலை அருகில், திருச்செங்கோடு. |
| 10.04.2025 வியாழக்கிழமை | மாலை 4.00 மணி | ஈரோடு வடக்கு | இராமாயம்மாள் திருமண மண்டபம், கோபிச்செட்டிபாளையம். |
| 12.04.2025 சனிக்கிழமை | காலை 9.00 மணி | சேலம் கிழக்கு | தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம், கழக அலுவலகம், வாழப்பாடி. |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 06-04-2025

